**அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியம் - 2018**

அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியத்தின் 2018 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியச் சட்டத்தின் 10(4) பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்தம் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக் கூற்றுக்கள், விதிகள் மூலம் குறிப்பிடக்கூடிய வகையில் காலப்பகுதியில் அந் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்திற்கு தயாரித்தல் இடம்பெறுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும். எவ்வாறாயினும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈபீ/12 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்குரிய பெறுமதி மற்றும் செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்குரிய பட்டியல்கள், பற்றுச்சீட்டுக்கள், இருப்பு சான்றிதழ்கள் போன்ற ஆவணங்கள் கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகளாக உறுதிச்சீட்டுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் 17 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 1,239,907 கூட்டுத்தொகையான | நிதியத்திலிருந்து செய்யப்படும் சகல கொடுப்பனவுகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு தேவையான எழுத்துமூல இணைப்புடன் | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுடன் அதற்குரிய உறுதிப்படுத்தல் மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்குரிய எவ்வித சான்றுகளும் சமர்ப்பிக்காமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| i நிதிப் பிரமாணம் 137 | நிதிப் பிரமாணம் 137 இன் பிரகாரம் கொடுப்பனவு அங்கீகரிக்கப்படாத 14 உறுதிச்சீட்டுக்கள் மூலம் ரூபா 1,862,369 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சகல கொடுப்பனவுகளும் காசோலைகள் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் ஏதேனும் தவறொன்று காரணமாக அக்கொடுப்பனவு அங்கீகரித்தல் ' பரிந்துரை தவறியிருப்பதாகவும் அவ்வாறு தவறுகள் இடம்பெறாமல் ' இருப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கொடுப்பனவு அங்கீகாரம் செய்யப்பட வேண்டும் |
| ii நிதிப் பிரமாணம் 138 மற்றும் 257 | சான்றுறுதிப்படுத்தப்பட்ட உறுதிச்சீட்டுகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 138 உறுதிச் சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தாமல் ரூபா 22,935,154 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் தவறொன்று காணப்பட்ட போதும் செய்யப்பட்ட சகல செலவினங்களும் நம்பிக்கை பொறுப்பு சபையின் ஒருமித்த அங்கீகாரத்தின் பேரில் மேற்கொண்டு அங்கீ கரிக்கப்பட்டுள்ளதாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கொடுப்பனவு அங்கீகாரம் செய்யப்பட வேண்டும் |
| iii நிதிப் பிரமாணம் 177 (1) மற்றும் (3) | நாளாந்த பணப் பெறுவனவுகள் தாமதமின்றி வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் கிடைத்திருந்த ரூபா 192,965 ஆன நுழைவுச்சீட்டுக்கள் | 2018 ஆம் ஆண்டில் தொகுதியில் பல அபிவிருத்தி செயற்திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டதுடன் அந்த சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட அவசர சந்தர்ப்பங்களில் பணம் செலவிடுவதற்கு | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கொடுப்பனவு அங்கீகாரம் செய்யப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| மற்றும் குத்தகை வாடகை வருமானம் வங்கியிலிடப்படாமல் செலவிடப்பட்டிருந்தது. | நேர்ந்தாகவும் அச்செலவினம் கௌரவ தலைவரின் அங்கீகாரத்தின் பேரில் மேற்கொள்வதற்கு அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்ததாக. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்புலுவாவ உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியத்தின் 2009 இன் 44 ஆம் இலக்க 4 ஆம் பிரிவின் (அ) முதல் (க) வரையான 20 நோக்கங்களில் ஆட்களின் விளையாட்டு மற்றும் களியாட்ட நடவடிக்கைகள் தொடர்பான இயலுமைகளை அபிவிருத்தி செய்வதற்காக போதியளவு வசதிகளை வழங்குதல், விவசாயிகளை தைரியப்படுத்தல் மற்றும் சமூகத்தில் இளையோர் விவசாய அமைப்புக்களை தாபித்தல் அம்புலுவாவ கந்தையைச் சுற்றிய பிரதேசததை மேம்படுத்துதல் மற்றும் புத்திசாதுரியமாக வங்கிகளிலும் ஏனைய நிதி நிறுவனங்களிலும் முதலீடு செய்வதற்கும் ஆட்களை ஊக்கவித்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மீளாய்வாண்டில் நிதியத்தால் போதியளவு நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியத்திற்கு கிடைக்கும் வருமானம் பயன்படுத்தப்பட்டு தொகுதியில் பல அபிவிருத்தி செயற்திட்டங்களை மேற் கொள்வதற்காக பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத தொழிலாளர்களைப் பயன்படுத்தி அவர்களுக்கு நியாயமான சம்பளமொன்றின் கொடுப்பனவு அடிப்படையில் அவர்களின் நிலைத்திருதன்மைக்காக உபகாரம் செய்தல், வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு ஒத்துழைத்தல், எதிர்வரும் செயற்பாடுகளுக்காக வெவ்வேறு பிரிவுகள் தொடர்பாக பயிற்சி பெற்ற தொழிலாளர்களை உருவாக்குவதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தல், சமூக மற்றும் பொருளாதார செயற்பாடுகள் மூலம் சிறந்த ஒத்துழைப்பொன்றை ஏற்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் அதிகளவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக. | இந்தியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்புலுவாவ நிதியத்திடம் காணப்படுகின்ற ரூபா 5,400,000 ஆன நூலக கட்டிடம், ரூபா 2,500,000 ஆன சுற்றுலா விடுதியொன்று மற்றும் பெறுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத நடன அரங்கம் ஒன்று மீளாய்வாண்டில் எவ்வித செயற்பாடு களுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் பேணிச்செல்லப்படும் உரிய நிதிக் கொள்கையின் செலவின கொள்கையின் பிரகாரம் ரூபா 200,000 இற்கு மேற்பட்ட செலவினத்திற்காக மட்டுப்படுத்தப்பட்ட பெறுகை நடைமுறை பின்பற்றப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் 05 சந்தர்ப்பங்களில் ரூபா 1,287,525 ஆன பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்வதற்காக செலவிடும் போது எந்தவொரு பெறுகை செயற்பாடும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | நம்பிக்கை பொறுப்பின் முன்னைய மற்றும் பிற்கால அங்கீகாரத்தின் பேரல் மேற் கொகொள்ளபட்டுள்ளதாக. | நிலையத்தினை நடாத்திச் செல்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள நிதிக் கொள்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நம்பிக்கை நிதியத்திற்கு உரித்து இல்லாத வாகனமொன்று ஒட்டத்தில் ஈடுபடுத்தப் பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அவ்வாகனத்திற்காக ரூபா 105,532 ஆன திருத்த செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதியத்திற்கு சொந்தமான மூன்று வாகனங்களுக்காக தேவையான உரித்து பத்திரம் (பதிவுச் சான்றிதழ்) மற்றும் ஏனைய தகவல்கள் அடங்கிய கோவையொன்றை பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிதியத்திற்கு சொந்தமான வாகனங்களுக்கு மாத்திரம் திருத்தச் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4(1) பந்தியின் பிரகாரம் நம்பிக்கை நிதியத்திற்காக வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு அதனை நம்பிக்கை பொறுப்பு சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு அதற்கு இணங்கும் வகையில் பாதீட்டை கட்டுப்படுத்தி நிதியத்தின் நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பின்னைய ஆண்டுகளுக்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டு இத்தேவைப்பாட்டை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |